بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/12/2020 அன்று இலண்டனிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அலீ பின் அபூதாலிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

கடந்த குத்பாவிலிருந்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு இடம் பெற்று வருகின்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் சகோதரத்துவம் தொடர்பாக அறிவிப்பில் இவ்வாறு வருகின்றது. **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களை இரண்டு முறை தனது சகோதரராக குறிப்பிட்டுள்ளார்கள்.** ஒரு முறை மக்காவில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஹாஜிர்களுக்கு மத்தியில் சகோதரத்துவத்தை ஏற்படுத்தினார்கள். பின்னர் அன்னார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத்திற்குப் பிறகு மதீனாவில், முஹாஜிரீன் மற்றும் அன்ஸாருக்கு மத்தியில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். **இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம், நீர் இவ்வுலகிலும் மறு உலகிலும் எனது சகோதரர் ஆவீர் என்று கூறினார்கள்.**

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தபூக் போரைத் தவிர, பத்ர் போர் மற்றும் அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். தபூக் போரின் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை குடும்பத்தை பாதுகாக்கும் பொறுப்பில் நியமித்திருந்தார்கள்.

ஹஸ்ரத் ஸஃலபா பின் அபூ மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் சஅத் பின் உபாதா (ரலி) அவர்கள் எல்லா சந்தர்ப்பத்திலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சார்பாக கொடியை ஏந்தி நின்றார்கள். ஆனால் போருக்கான நேரம் வரும்போது ஹஸ்ரத் அலீ பின் அபூ தாலிப் அவர்கள் கொடியை பற்றிக் கொள்வார்கள்.

உஷைரா என்ற போர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு ஜமாதில் ஊலா மாதம் நடைபெற்றது. ஹஸ்ரத் அம்மார் பின் யாஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: உஷைரா போரில் நானும், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களும் பயண நண்பர்களாக இருந்தோம். அந்த நாளில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் உடலில் மண் இருப்பதைப் பார்த்து, அபூ துராபே! என்று கூறினார்கள்.

பின்னர் அன்னார் (ஸல்) கூறினார்கள்: நான் உங்களுக்கு மோசமான இருவரைப் பற்றி கூறட்டுமா? என்று கேட்டார்கள். அதற்கு, ஆம்! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே என்று நாங்கள் கூறினோம். முதலாவது நபர், ஸமூது சமுதாயத்தைச் சேர்ந்த சாலிஹ் நபியின் ஒட்டகத்தின் கால்களை வெட்டிய ஓஹேமர் என்பவன் ஆவான். இரண்டாவது நபர், அலீயே! உங்களின் தலையில் தாக்குதல் நடத்துபவன் ஆவான். எந்த அளவுக்கு என்றால் அவனது தாக்குதலால் தாடி இரத்தத்தால் நனைந்து விடும்.

பத்ர் போர் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டில் நடைபெற்றது. அதாவது, கி.பி 623 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்றது. பத்ர் போர் சந்தர்ப்பத்தில் இரண்டு படைகளும் ஒருவரையொருவர் எதிர்கொண்டபோது, முதன் முதலில் ரபீஆவின் இரண்டு மகன்களான ஷைபா உத்பா மற்றும் வலீத் பின் உத்பா ஆகிய இருவரும் சண்டைக்காக முன் வந்தார்கள். சண்டையிட அழைத்தார்கள். அப்போது பனூ ஹாரிஸ் கோத்திரத்தைச் சார்ந்த முஆஸ், முஅவ்விஸ் மற்றும் அவ்ஃப் ஆகிய மூன்று அன்ஸார் சண்டைக்காக புறப்பட்டார்கள்.

இவர்கள் உஃப்ராவின் மகன்களாவர். ஆனால் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திரும்ப அழைத்தார்கள். மேலும், பனூ ஹாஷிமே! எழுந்திருங்கள். உண்மைக்காக போரிடுங்கள். அல்லாஹ் உங்களது நபியை அந்த உண்மையுடன் அனுப்பி இருக்கின்றான் என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி), ஹஸ்ரத் அலீ (ரலி), ஹஸ்ரத் உபைதா (ரலி) ஆகியோர் எழுந்து நின்றனர். அவர்கள் எதிரிகளை நோக்கி முன்னேறினார்கள்.

அப்போது உத்பா தனது மகன்களிடம், வலீதே! எழுந்திரு என்று கூறினான். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனுக்கெதிராக சண்டைக்காக சென்றார்கள். இருவருக்கிடையிலும் வாள் சண்டை நடைபெற்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். பின்னர் உத்பா வந்து நின்றான். ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். பின்னர் ஷைபா எழுந்து நின்றான். அவனுக்கு எதிரில் ஹஸ்ரத் உபைதா (ரலி) அவர்கள் சென்றார்கள். அவர்கள் மிகவும் வயதானவராக இருந்தார்கள். ஷைபா, ஹஸ்ரத் உபைதா அவர்களின் காலில் வாளை வீசினான். அது அன்னாரின் கால்களின் பின்புறமிருந்த சதையில் பட்டு அதை கிழித்தது. ஹஸ்ரத் ஹம்ஸா (ரலி) மற்றும் ஹஸ்ரத் அலீ (ரலி) ஆகியோர் ஷைபா மீது தாக்குதல் தொடுத்து அவனைக் கொன்று விட்டனர்.

**ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்ர் போர் சந்தர்ப்பத்தில் என்னைப் பற்றியும், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களைப் பற்றியும் இவ்வாறு கூறினார்கள்: உங்கள் இருவரில் ஒருவரின் வலப்பக்கத்தில் ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களும், மற்றவரின் வலப்பக்கத்தில் ஹஸ்ரத் மீகாயீல் அவர்களும் உள்ளனர்.** மேலும் ஹஸ்ரத் இஸ்ராஃபீல் என்பவர் பெரும் வானவர் ஆவார். அவர் போர் நேரத்தில் வருகை தருகின்றார். மேலும் படை வரிசையில் நிற்கின்றார்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களின் திருமணம் ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களுடன் ஹிஜ்ரி 2 ஆம் ஆண்டு நடைபெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) அவர்களுடன் திருமணம் நடத்தி வைக்கும்படி ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் வேண்டினார்கள். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் மனமகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள், உங்களிடத்தில் மஹர் கொடுக்க ஏதாவது உள்ளதா? என்று கேட்டார்கள். அதற்கு நான், என்னிடம் ஒரு குதிரையும், எனது போர்க் கவசமும் உள்ளது என்று கூறினேன். அதற்கு அன்னார், உங்களது போர்க் கவசத்தை விற்று விடுங்கள் என்று கூறினார்கள். நான் எனது அந்த கவசத்தை 480 திர்ஹமிற்கு விற்று மஹர் தொகைக்கான ஏற்பாட்டைச் செய்து விட்டேன்.

**மக்கள் மஹரைக் குறித்து கூறும்போது, அதை பிறகு பார்த்துக் கொள்ளலாம்; அதை பிறகு கொடுக்கிறோம் எனக் கூறுகின்றனர். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ, மஹருக்கான ஏற்பாட்டை முதலில் செய்யுங்கள் என்று கூறியுள்ளார்கள். இதன் பொருள் அது உடனடியாக செலுத்த வேண்டிய உரிமையாகும். பெண்கள் மஹர் தொகையை முதலிலேயே கேட்கின்றார்கள். ஆனால் நாங்கள் மிக மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றோம் என்று எனக்கு சிலர் எழுதுகின்றார்கள். பெண்கள் மஹர் தொகையை கொடுக்குமாறு கேட்கின்றார்கள் என்றால் அது அவர்களது உரிமையாகும். அதை அப்போதே கொடுத்து விட வேண்டும்.**

தனது மகளை திருமணம் முடித்து அனுப்பி வைத்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்கள் உங்களிடம் வருகை தந்த பிறகு நான் வரும் வரை எதுவும் பேச வேண்டாம்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தார்கள். மேலும் எனக்கு தண்ணீர் கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களிடம் கூறினார்கள். அன்னார் தண்ணீர் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை பெற்றுக் கொண்டார்கள். அதனைக் கொண்டு வாய் கொப்பளித்தார்கள். பிறகு ஃபாத்திமா

அவர்களின் தலையின் மீது சற்று தண்ணீரை தெளித்தார்கள். பின்னர் இவ்வாறு துஆ செய்தார்கள். அல்லாஹ்வே! நான் இவர்களையும், இவர்களின் சந்ததிகளையும் விரப்பட்ட ஷய்த்தானிடமிருந்து உமது பாதுகாப்பில் ஒப்படைக்கின்றேன். பின்னர் திரும்பி நிற்குமாறு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அன்னார் திரும்பி நின்றபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரின் தோள்களில் தண்ணீரை தெளித்தார்கள். இதேபோன்று ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுடனும் நடந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் மூலமாக பிறந்த குழந்தைகளில் எல்லாரையும் விட ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்கள் இளையவராவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது பிள்ளைகளில் எல்லாரையும் விட ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்கள் மீது மிகவும் அன்பு கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமா (ரலி) ஆகியோர் தமது வறுமை நிலையிலும் தூய்மை மற்றும் போதுமென்ற மனமுடையவர்களாக இருந்தார்கள்; முன்னுதாரணமாக திகழ்ந்தார்கள். ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்கள் உரலில் அரைப்பதால் தமது கைகளில் வேதனை ஏற்படுவதாக முறையிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சில கைதிகள் வந்திருந்தார்கள். எனவே ஃபாத்திமா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றார்கள். ஆனால் அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அங்கு இல்லை. ஹஸ்ரத் ஆயிஷா அவர்களிடம், தான் வந்த நோக்கத்தை கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வருகை தந்தவுடன் ஹஸ்ரத் ஆயிஷா அவர்கள் ஹஸ்ரத் ஃபாத்திமா வந்ததைப் பற்றி கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் படுக்கைக்கு சென்று விட்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் வருகை தந்தார்கள். நாங்கள் எழுந்தோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நீங்கள் உங்களது இடத்திலேயே இருந்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். பின்னர் எங்களுக்கிடையில் அமர்ந்து கொண்டார்கள். நீங்கள் கேட்ட விஷயத்தை விட உங்கள் இருவருக்கும் சிறந்த விஷயம் ஒன்றை நான் கூறட்டுமா? என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டார்கள். பின்னர் கூறினார்கள்: அது என்னவென்றால், நீங்கள் இருவரும் **படுக்கையில் படுக்கும்போது 34 முறை அல்லாஹு அக்பர் என்று கூறுங்கள். 33 முறை சுப்ஹானல்லாஹ் என்று கூறுங்கள். 33 முறை அல்ஹம்துலில்லாஹ் என்று கூறுங்கள். இது உங்கள் இருவருக்கும் வேலை ஆட்களை விட மிகச் சிறந்த ஒன்றாகும்.**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இச்சம்பவத்தைக் குறித்து எழுதுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விரும்பியிருந்தால் ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களுக்கு பணியாளரை கொடுத்திருக்கலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் பங்கிட்டுக் கொடுப்பதற்காகவே வந்த செல்வங்கள் சஹாபாக்களுக்காகவே வந்தன. ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும் அதில் உரிமை இருந்திருக்கக்கூடும். ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களுக்கும் அதில் உரிமை இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் எச்சரிக்கையாக செயலாற்றினார்கள். **ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த செல்வங்களிலிருந்து தனது அன்பர்களுக்கும், தனது உறவினர்களுக்கும் கொடுக்க விரும்பவில்லை. ஏனென்றால் எதிர்காலத்தில் இதிலிருந்து மக்கள் ஏதாவதொரு விளைவுகளை தேடிக் கொள்ளவது சாத்தியமானதாக இருந்தது. அரசன் மக்களின் செல்வத்தை தமக்கு ஆகுமானதாக கருதிக் கொள்வதுண்டு. பைத்துல் மாலுடைய செல்வத்தை இவ்வாறு பாதுகாத்த ஏதாவதோர் அரசனுடைய உதாரணத்தை உலகம் எடுத்துக் காட்ட இயலுமா?**

ஹஸ்ரத் அலீ பின் அபூ தாலிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஓர் இரவில் என்னிடத்திலும், அன்னாரது மகள் ஹஸ்ரத் ஃபாத்திமா அவர்களிடத்திலும் வருகை தந்தார்கள். நீங்கள் இருவரும் (தஹஜ்ஜுத் தொழுகை) தொழுவதில்லையா? என்று கேட்டார்கள். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே!

எங்களது உயிர்கள் அல்லாஹ்வின் கரத்தில் உள்ளன. அவன் விரும்பும்போது எங்களை எழுப்புகின்றான். நாங்களும் எழுந்து விடுகின்றோம் என்று கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதற்கு எந்த பதிலும் தரவில்லை. அன்னார் திரும்பிச் சென்று விட்டார்கள்.

ஹஸ்ரத் அலீ அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் திரும்பி சென்று கொண்டிருக்கும்போது அன்னார் தனது தொடையில் கை தட்டியவாறு, وَكَانَ الْإِنْسَانُ اَكْثَرَ شَيْءٍ جَدَلًا **மனிதன் எல்லாரையும் விட அதிகமாக தர்க்கம் செய்யக்கூடியவனாக இருக்கின்றான்** என்று கூறிக் கொண்டிருந்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இது திருக்குர்ஆனின் ஒரு வசனமாகும். அதன் பொருள் என்னவென்றால், மனிதன் பெரும்பாலும் தனது தவறை ஒப்புக் கொள்வதற்கு பதற்றமடைகின்றான். மேலும் பல்வேறு வகையான ஆதாரங்களைக் கொடுத்து தனது குறைகள் மீது திரையிடுகின்றான்.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கோபப்படாமல் எவ்வாறான நுட்பமான ஒரு வழி முறையை மேற்கொண்டார்கள் என்றால், ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் தமது வாழ்வின் இறுதி மூச்சு வரை இந்த நுட்பமான வழிமுறையைக் கண்டு இன்புற்றிருப்பார்கள். **இந்த ஹதீஸிலிருந்து நமக்கு ஏராளமான விஷயங்கள் தெரிய வருகின்றன. இதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நல்லொழுக்கங்களின் பல்வேறு அம்சங்களின் மீது ஒளி விழுகிறது. முதல் விஷயம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மார்க்க விஷயத்தில் எந்த அளவுக்கு அக்கறை இருந்ததென்றால் இரவு நேரத்தில் வலம் வந்து தனது உறவினர்களை கருத்தில் கொண்டார்கள்.**

**இரண்டாவது விஷயம் என்னவென்றால், இரவு நேரத்தில் அன்னார் (ஸல்) தனது மகள் மற்றும் மருமகனிடத்தில் செல்கின்றார்கள். மேலும் அவர்கள் தஹஜ்ஜுதும் தொழுது வர வேண்டும் என அவர்களுக்கு கவனமூட்டுகிறார்கள். இது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கள் அனைவரையும் வழிநடத்த விரும்பிய அந்த போதனையின் மீது அன்னாருக்கு இருந்த முழுமையான நம்பிக்கையை குறிக்கிறது.**

**மூன்றாவது விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒவ்வொரு விஷயத்தையும் புரிய வைப்பதற்கு பொறுமையை கையாண்டுள்ளார்கள். சண்டையிடுவதற்கு பகரமாக அன்பு மற்றும் நேசத்தால் ஒருவருடைய தவறுகளை அவருக்கு சுட்டிக் காட்டுவார்கள்.** ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த சம்பவத்திற்குப் பிறகு நான் ஒருபோதும் தஹஜ்ஜுத் தொழுகையை விட்டதே இல்லை.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்: தற்போது இந்த குறிப்பு நடைபெற்று வருகின்றது. எதிர்காலத்திலும் நடைபெறும் இன்ஷாஅல்லாஹ்.* ***இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் நிலவரம் மேலும் கடினமாகிக் கொண்டே செல்கின்றது. சில அரசாங்க அதிகாரிகள் மவ்லவிகளுக்குப் பின்னால் சென்று, அவர்களுடன் கூட்டணி அமைத்துக் கொண்டு நமக்கு எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியுமோ ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றனர். எனவே குறிப்பாக துஆ செய்யயுங்கள். மேலும் ரப்வாவிலுள்ள அஹ்மதிகளும், பாகிஸ்தானில் மற்ற நகரங்களில் வாழ்கின்ற அஹ்மதிகளும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் எல்லா இடங்களிலும் அவர்களை தனது பாதுகாப்பில் வைப்பானாக. மேலும் தீங்குகளிலிருந்து அவர்களை பாதுகாப்பானாக. எதிரிகளின் திட்டங்கள் மிகவும் கொடூரமான, அபாயகரமான திட்டங்களாகும். அதிலிருந்து அல்லாஹ் காப்பாற்றுவானாக. மேலும் அந்த மக்களை இப்போது பிடிப்பதற்கான ஏற்பாட்டை இறைவன் விரைவாக செய்வானாக.***

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் மதிப்பிற்குரிய கமாண்டர் சவுத்ரி முஹம்மது அஸ்லம் சாஹிப் மர்ஹூம், மதிப்பிற்குரிய ஷாஹினா கமர் சாஹிபா மர்ஹூமா, மதிப்பிற்குரிய சமர் அஹ்மது கமர் சாஹிப் மர்ஹூம் மற்றும் மதிப்பிற்குரிய ஸயீதா அஃப்ஸல் கோகர் சாஹிபா மர்ஹூமா ஆகியோரின் நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். மேலும் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழ வைப்பதாக கூறினார்கள்.*

(*தமிழாக்கம்:* *மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்*)